# நிதி ஆணைக்குழு

## அதி மேதகு ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் - (2020)

(இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின்

உறுப்புரை 154 **R** (4) இன் பிரகாரம்)

செப்ரெம்பர் 2019

මුදල් කොමිෂන් සභාව
(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 "ඊ" ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)
நிதி ஆணைக்குழு
(அரசியலமைப்பின் 154 "ஊ" ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டது)
**FINANCE COMMISSION**
(Established under Article 154 "R" of the Constitution)

03, සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 03, சரண மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
03, Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka.

මගේ අංකය / எனது இல. / My No. FC/3/1/ 2019 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2019.09.03

மேதகு மைத்திரிபால சிறிசேன
சனாதிபதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
சனாதிபதி செயலகம்
கொழும்பு – 01

மேதகு சனாதிபதி,

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 13வது திருத்தச் சட்டத்தின் 154R (4) உறுப்ப்ரிமைக்கு அமைவாக மாகாண சபைகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் கொடையினை பகிர்ந்தளிப்பது சம்பந்தமான பரிந்துரைகளை வழங்குவது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்.

2020 ஆம் ஆண்டிற்கான மகாணங்களின் பயன்பாட்டிற்காக வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட வேண்டிய நிதியைப் பகிர்வது தொடர்பாக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்.

தங்களின் மரியாதைக்குரிய

U.H.பலிஹக்கார
தலைவர்
நிதி ஆணைக்குழு

සභාපති / தலைவர் / Chairman (+94)011 2866724 ලේකම් / செயலாளர் / Secretary (+94)011 2866824 කාර්යාලය / அலுவலகம் / Office (+94)011 2866747 ෆැක්ස් / தொலைநகல் / Fax (+94)011 2866671 (+94)011 2866679 විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail info@fincom.gov.lk
www.fincom.gov.lk

# பொருளடக்கம்


பக்க எண்.

**சுருக்க அறிக்கை** **I**

**1. அறிமுகம்** **01**

1.1 நிதி ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கம் 01

2.1 நிதி ஆணைக்குழுவின் பிரதான செயல்பாடு 01

**02. தேசிய வரவுசெலவுத் திட்டமும் மாகாண சபைகளுக்கு அரச கொடைகளும்** **02**

2.1. அரசிறை பகிர்வு தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள் 02

2.2. மாகாணங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு 02

2.3. மாகாண சபைகளுக்கு அரச கொடைகள் 03

**03. மாகாண சபைகளின் தேவை மதிப்பீடுகளும்அரசாங்க கொடைகளிற்கான கோரிக்கைகளும்** **04**

3.1. மாகாணங்களின் சமூக பொருளாதார நிலை 04

3.2. மாகாண சபைகளின் சேவை வழங்கல்கள் 06

3.3. மாகாண சபைகளின் மூலதன செலவு தேவைகள் 07

3.4. மாகாண சபைகளின் மீண்டு வரும் செலவு தேவைகள் 08

3.5. மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டு வரும் செலவு பாதீட்டுத் தேவைகள் 08

3.6. மாகாண வருமான மூலங்கள் 09

3.7. 2020 ஆம் ஆண்டிற்கான வருமான முன்மதிப்பீடு 09

**04. தேசிய வரவு செலவுத் திட்டத்திலிருந்து மாகாண சபைகளிடையே நிதி ஒதுக்கீடு செய்வதற்கான பரிந்துரை - 2020** **11**

4.1. கூட்டு குறிகாட்டியும் நிதிப் பகிர்ந்தளிப்பும் 11

4.2. மூலதன நிதிகளின் பரிந்துரை மற்றும் பகிர்ந்தளிபுகள் 12

4.3. மீண்டு வரும் நிதிகளின் பரிந்துரை மற்றும் பகிர்ந்தளிப்புகள் 13

**05. சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கான பரிந்துரை செய்வதில் சிக்கல்கள் மற்றும் வரையறைகள்.** **15**

**06. கொள்கை பரிந்துரைகள்** **16**

இணைப்புகள்

*இணைப்பு - 01 : தொகுதி கொடை ஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு 2015 - 2019*

*இணைப்பு - 02 : மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை ஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு 2015 - 2019*

*இணைப்பு - 03 : பிரமாண அடிப்படையிலான கொடை ஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு 2015 – 2019*

*இணைப்பு - 04 : மாகாண வருமான சேகரிப்பு மூலங்கள் - 2018*

*இணைப்பு - 05 : நிதிஒதுக்கீடு செய்வதற்கான சூத்திரத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள் - 2020*

## சுருக்க அறிக்கை

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் உறுப்புரை 154 R பிரிவின் கீழ் 1987 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழு நிறுவப்பட்டது. அரசியலமைப்பு ஆணைக்கு அமைவாக, நிதி ஆணைக்குழு மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் இருந்து போதுமான நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை செய்கிறது. அதன்பிரகாரம், நிதி ஆணைக்குழு மாகாணங்களின் தேவைகளை மதிப்பிடுவதுடன், நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் ஒன்பது மாகாணங்களுக்கிடையே நிதியைப் பகிர்வதற்கான தத்துவங்களை ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கிறது.

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில்; மாகாணங்களிடையே நியாயபூர்வமான முறையில் நிதி பகிர்வு செய்வதற்கான தத்துவங்களுடன் கூடிய, மாகாண சபைகளுக்கு அரசாங்க மானியங்களின் கீழ் போதுமான நிதி வழங்குதலுக்கான பரிந்துரை, மற்றும் நாட்டில் மக்களின் உயர்ந்த சமூக-பொருளாதார தரங்களுடன் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கான கொள்கைப் பரிந்துரைகள், மேலும் உப தேசிய மட்டத்தில் பொது முதலீட்டு திட்டம், சேவை வழங்கல்கள் என்பவற்றை வினைத்திறனுடன் அமுலாக்குவதற்கான பரிந்துரைகள் என்பன உள்ளடங்குகின்றன.

நிதி ஆணைக்குழு அரசாங்கத்தின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் மானியங்களை பின்வரும் வடிவங்களில் பரிந்துரைக்கிறது

அ. மாகாணங்களின் மீண்டு வரும் செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தொகுதி கொடை
ஆ. மூலதனத்துடன் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை
இ. மூலதனத்துடன் சார்ந்த நிதியளிப்பதற்கான பிரமாண அடிப்படையிலான கொடை
ஈ. பகிர்ந்தளிக்கப்பட்ட வருவான செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக வருமான செயல்பாட்டு கொடை

மாகாணங்களின் மீண்டு வரும் செலவினம் சார்ந்த தேவைகளுக்கான தொகுதி கொடை மதிப்பீடு மற்றும் பரிந்துரை மாகாண சபைகளின் இலக்கிடப்பட்ட வருமானம் மற்றும் அரசாங்க வருமான மாற்றல்கள் ஆகியவற்றையும் கவனத்தில் கொண்டுள்ளது. மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை (PSDG) மற்றும் பிரமாண அடிப்படையிலான கொடை (CBG) என்பவற்றின் மூலதன கொடைகளிற்கான பரிந்துரைகள் மற்றும் மாகாணங்களிடையே நிதி பகிர்வு ஆகியவை தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண மட்ட குறிகாட்டிகளைப் பயன்படுத்தி ஒரு கூட்டு சுட்டெண்ணை பயன்படுத்துகிறது.

நிதி ஆணைக்குழு சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதில் உள்ள பிரதான சிக்கல்கள், வரையறைகளை இனங்கண்டு வெளிப்படுத்துவதுடன் அவ்வாறானவற்றை தீர்த்துக் கொள்ளும் பரிந்துரைகளையும் முன்வைக்கின்றது.

## 1. அறிமுகம்

இலங்கையின் ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் உறுப்புரை 154 R பிரிவின் கீழ் 1987 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழு நிறுவப்பட்டது.

### 1.1 நிதி ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கம்

நிதி ஆணைக்குழுவின் உருவாக்கம் அதன் செயல்படுகளிற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 13 வது திருத்தச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் உறுப்புரை 154 R (3), (4) மற்றும் (5) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி நிதிஆணைக்குழுவின் முக்கிய செயல்பாட்டு பொறுப்புகள் பின்வருமாறு குறிதுரைக்கப்பட்டுள்ளது;

154R (3) அரசாங்கம் நிதிஆணைக்குழுவின் பரிந்துரைகள்மீதும், கலந்தாலோசிப்பதன் மூலமும் மாகாணங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான நிதியை வருடாந்த வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யும்.

154R (4) ஜனாதிபதிக்கு பின்வரும் விடயங்களிலில் பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்.

அ) அரசாங்கத்தால் வருடாந்தம் வழங்கப்படும் அத்தகைய நிதிகள் தொடர்பாகவும் மாகாணங்களின் பயன்பாட்டுக்காக, பல்வேறு மாகாணங்களுக்கிடையில் ஒதுக்கப்படுதல் தொடர்பான நியமங்கள்

ஆ) மாகாண நிதி தொடர்பாக ஜனாதிபதியால் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்

154R(5**)** நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் அத்தகைய கொள்கைகளை நிதி ஆணைக்குழு ஒழுங்கமைப்பதுடன் அதற்காக பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளும் ;

அ) ஒவ்வொரு மாகாணத்தின் குடிசனத்தொகை,

ஆ) ஒவ்வொரு மாகாணத்தின் தனிநபர் வருமானம்,

இ) சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து முன்னேற்றத்தக்கான தேவைகள் மற்றும்

ஈ) ஒவ்வொரு மாகாணத்தின் தனிநபர் வருமானம் அவற்றிற்கிடையேயான வித்தியாசம் குறைக்கப்படுவதுடன் மகாணங்களிடையே உயர்ந்த தனிநபர் வருமானத்தை பேணுவதற்கான முன்னேற்ற தேவைகள்

அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (7) இன் பிரகாரம் ஜனபதிபதி நிதி ஆணைக்குழு சமர்ப்பிக்கும் ஒவ்வொரு பரிந்துரையையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து நடவடிக்கை மேற்கொள்வார்.

### 1.2 நிதி ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடுகள்

அரசியலமைப்பு அடிப்படை நோக்கத்துக்கு அமைவாக, நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கத்துடன் மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும், கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வகுப்பதற்கும் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அரசுக்கு பரிந்துரைகளை வழங்குவது நிதி ஆணைக்குழுவின் முக்கிய பணியாகும்.

இந்த செயல்முறையில், மாகாண நிதி தேவைகளை மதிப்பிடுவதற்கு நிதி ஆணைக்குழு மாகாணசபைகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

அதன்பிரகாரம், நிதி ஆணைக்குழு மாகாணங்களின் நிதித் தேவைகளை மதிப்பிட்டு, மாகாணங்களுக்கு பகிரப்ப்பட வேண்டிய நிதி கொள்கை குறித்து அதன் பரிந்துரைக்கின்றது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையில் நியாயபூர்வமான முறையில் மாகாணங்களுக்கிடையில் நிதி பகிர்வு, மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடை களின் கீழ் போதுமான நிதி வழங்குதல் மற்றும் நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி மற்றும் மக்களின் உயர் சமூக-பொருளாதார தரங்களை அடைவதற்கான கொள்கைகள் என்பன அடங்கும்.

## 2. தேசிய வரவு செலவுத் திட்டமும் மாகாண சபைகளிற்கான கொடைகளும்

### 2.1. நிதிப் பகிர்வு தொடர்பாக அரசியலமைப்பு ஏற்பாடு

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் என்ற மூன்று தனித்துவமான படிநிலைகளை உருவாக்கியது. அதன்பிரகாரம், மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நிதி அதிகாரத்தின் பகுதிகளை வரையறுப்பதன் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட ஆளுகை நிறுவப்பட்டது. பதின்மூன்றாவது திருத்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள மூன்று பட்டியல்களிலும், மாகாண சபைகளின் பட்டியல் (மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள்), ஒதுக்கப்பட்ட பட்டியல் (மத்தியிலுள்ள அதிகாரங்கள்), மற்றும் ஒத்தியங்கும் பட்டியல் (இணைந்து கடமையாற்றும் விடயங்கள்) என்ற மூன்று பட்டியல்களினதும் அதிகார விடயப்பரப்புக்கள் குறிப்பிடப்பட்டிருகின்றன .

உப தேசிய மட்டங்களில் அரச முதலீடு மற்றும் சேவை வழங்கல்கள் i) மத்திய அரச செலவு நிறுவனங்கள் ii) உள்ளூராட்சி அதிகாரசபைகள் உள்ளிட்ட மாகாண சபை செலவு நிறுவனங்கள் என்பவற்றால் மேற்கொள்ளப்படுகிறது.

மாகாணத்துக்குரிய விடயங்கள் மிகப்பரந்ததொன்றாக கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, வீதிகள், விவசாயம், நீர்ப்பாசனம், சமூக சேவைகள், புனர்வாழ்வு, கிராம அபிவிருத்தி மற்றும் விளையாட்டு போன்ற விடயங்களையும் உள்ளடக்குகின்றது. மாகாண சபைகளால் சேகரிக்கப்பட வேண்டிய வருமான மூலங்களும் மாகாண பட்டியலில் அடங்குகின்றது. மாகாண சபைகள் அவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பட்டியலில் உள்ள விடயங்களின் கீழ் நடவடிக்கைகளை அமுல்படுத்த பொறுப்பாவதுடன், மேலும் ஒத்தியங்கும் பட்டியலின் கீழ் உள்ள நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கான இணை பொறுப்புகளையும் கொண்டிருக்கின்றன.

### 2.2. மாகாணங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு

மாகாணங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை அரசியலமைப்பு கோருகின்றது, இத்தகைய சந்தர்ப்பத்தில், நிதி ஆணைக்குழுவானது;

- நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கு வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒன்பது மாகாணங்களுக்கும் வளங்களை ஒதுக்குவதற்கான கொள்கைகளை நியாயமான முறையில் உருவாக்குகிறது.
- ஒவ்வொரு மாகாண சபைகளினாலும் சமர்பிக்கப்பட்ட தேவைகளின் அடிப்படையில் மாகாணங்களிற்கான நிதித் தேவைகளைத் தீர்மானித்து பரிந்துரைகின்றது .
- மாகாணங்களுக்கிடையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்குடன் மாகாண சபைகளுக்கிடையில் கிடைக்கக்கூடிய நிதியைப் பகிர்ந்தளிக்கிறது.

**2.3. மாகாண சபைகளிற்கு அரச கொடைகளின் ஒதுக்கீடு**

அரசாங்கம் மாகாண சபைகளிற்கான நிதியை பின்வரும் கொடைகளின் வடிவில் ஒதுக்கீடு செய்கின்றது.

அ. **தொகுதிக்கொடை** என்பது பொது சேவை வழங்கலை தொடர்ந்து செய்வதற்கும் மேம்படுத்துவதற்குமான நோக்கதிற்காக மாகாணங்களின் மீண்டு வரும் செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்படுகிறது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் தனியாள் வேதனங்கள் என்பதே மாகாண சபை மீண்டுவரும் செலவினங்களின் முக்கிய பகுதியாகும். இது உள்ளூரரட்சி மன்றங்களின் ஊழியர் சம்பளங்கள், உறுப்பினர்களின் படிகள் மற்றும் மூலதன சொத்துக்களை பராமரிப்பதற்கான செலவினங்களையும் உள்ளடக்குகிறது. தொகுதி கொடைகளின் 2015 - 2019 வரையிலான காலப்பகுதியிலான பகிர்வு விடுவிப்பு என்பன இணைப்பு - 01 இல் தரப்படுகின்றது.

ஆ. **மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை** (PSDG) என்பது பகிர்ந்தளிக்கப்பட்ட பல்வேறு துறைகளில் உள்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திகளில் கவனம் செலுத்தி மூலதனம் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்வதாகும். மாகாணங்களுக்கான நடுத்தர கால அபிவிருத்தித் திட்டம் மற்றும் மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டம் ஆகியவை மாகாண சபைகளினால் நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களுடன் ஒரு பொதுவான ஒருங்கிணைந்த திட்டமிடல் கட்டமைப்பில் வடிவமைக்கப்படுகின்றன.

இந்த வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டத்திற்கான நிதி ஏற்பாடுகள் வெவ்வேறு துறைகளின் கீழ் வழங்கப்படுகிறது. மாகாணங்களின் குறிப்பிட்ட தேவைகளை கருத்தில் கொண்ட மாகாண அபிவிருத்தி திட்டத்தில் பின்வரும் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மாகாண குறிதொதுக்கிய அபிவிருத்தி கொடையின் பெரும் பகுதி இத் துறைகளிற்கு ஒதுக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| * கல்வி. | * மாகாணவீதிகள் | * காணி அபிவிருத்தி |
| * மேற்கத்தியமருத்துவம் | * தோட்ட உட்கட்மைப்பு | * நீர்ப்பாசனம் |
| * சுதேச மருத்துவம் | * போக்குவரத்து | * விவசாயம் |
| * விளையாட்டு | * வீடமைப்பு | * கால்நடை வளர்ப்பு |
| * நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு | * கிராமியமின்னமை ப்பு | * நன்னீர் மீன் வளர்ப்பு |
| * சமூக சேவைகள் | * உள்ளூராட்சி | * சிறு கைத்தொழில் |
| * கலாசார மற்றும் சமய அலுவல்கள் | - உள் ளூர் அதிகாரசபை வீதிகள் | * உல்லாசத்துறை |
| * கூட்டுறவு அபிவிருத்தி | - சமூக நீர் விநியோகம் | * கிராமிய அபிவிருத்தி |
| * ஆரம்பகால குழந்தை பருவ வளர்ச்சி | - கழிவு முகாமைத்துவம் | |

மாகாண முதலீட்டு திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை ஈடு செய்ய ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு நெகிழ்வான தொகை ஒதுக்கப்படுவதுடன் விசேட தேவையுடைய கிராமங்களுக்கெனவும் ஒதுக்கப்படுகிறது. நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யபடும் PSDG நிதிக்கு மேலதிகமாக தேசிய மட்டத்தில் இனங்காணப்பட்ட விசேட கருதிட்டங்களுக்கான ஒதுக்கீடுகளும் உள்ளடக்கப்படுகின்றன .

PSDG இன் கீழ் ஒவ்வொரு மாகாண சபையினதும் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தித் திட்டம், நிதி ஆணைக்குழு மற்றும் அந்தந்த மாகாண சபைகளால் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மாகாணங்களில் அமுலாக்க உடன்பாடு காணப்படுகிறது. 2015 - 2019 காலப்பகுதியில் மாகாணங்களின் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தை

அமுலாக்க PSDG இன் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகளின் விபரம் இணைப்பு - 02 இல் தரப்படுகிறது.

இ. **பிரமாண அடிப்படையிலானகொடை** (CBG) என்பது மக்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துகின்ற பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களிப்பு செய்கின்ற மூலதன செலவினங்களுக்கு நிதி வழங்குவதாகும். நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி திட்டமிடப்பட்ட வரம்பிற்குள் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளுக்காக உடன்பாடு காணப்பட்ட நிதியை விருப்பப்படி செலவழிக்கத் தக்கதாக CBG நிதி மாகாண சபைகளுக்கு கிடைக்கிறது. 2015 - 2019 காலப்பகுதியில் பிரமாண அடிப்படைகயிலான கொடையின் கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகள் விபரம் இணைப்பு - 03 இல் தரப்படுகிறது.

ஈ. **வருவாய் செயல்திறன் கொடை** என்பது மாகாண வருவாயை ஊக்குவிப்பதற்காக மாகாண சபைகளுக்குபரிந்துரை செய்யப்படுகின்றது. இது பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான சேகரிப்பு தொடர்பான ஒரு சிறிய அளவிலான அபிவிருத்தி சார்ந்த கொடையாகும். இந்தகொடையை மாகாண சபைகள் தாம் விரும்பியவாறு மூலதனம் தொடர்பான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. மாகாணசபைகளினால் 2018 ல் சேகரிக்கப்பட்ட வருவாய் விபரங்கள் இணைப்பு - 04 இல் தரப்படுகிறது.

## 3.மாகாண சபைகளின் தேவை மதிப்பீடும் அரசாங்க மானியத்திற்கான கோரிக்கையும்

ஒவ்வொரு மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களுக்கான நிதி தேவைகளின் வருடாந்த நிதித் தேவை நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அதிமேதகு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குவதற்கு முன் மாகாண சபைகளின் கோரிக்கைகள் நிதி ஆணைக்குழுவால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

பொதுச் செலவு முகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பு, மாகாண சபைகளின் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் வருடாந்த செலவீனங்கள் மற்றும் பொது நிதியைச் செலவழிப்பதில் முன்னைய செயல்திறன் ஆகியவை தேவை மதிப்பீடுகளில் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

### 3.1. மாகாணங்களின் சமூக பொருளாதார நிலை

நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்களின் நலனுக்காகவும் உப தேசிய மட்டங்களில் அதிகாரப் பகிர்வைக் கொண்டு அபிவிருத்தி செயல்முறைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு பொருளாதார முன்னேற்றங்களை பரவலாகப் பரப்புதல், பெரியளவில் பல்வேறு இடங்களில் உள்ள வளங்களைப் பயன்படுத்துதல், குறிப்பாக பின்தங்கிய பகுதிகள் மற்றும் குறைந்த அளவில் சேவைகளைப் பெறுகின்ற பிராந்தியங்களை கருத்திற் கொண்டு பிராந்திய ஏற்றத்தாழ்வைக் குறைப்பது உட்பட பொருளாதார முன்னேற்றத்தின் நன்மைகளை விரிவாக்கிப் பேணுகின்ற அணுகுமுறையாகும்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது மேல் மாகாணம் அதிக மக்கள் தொகையையும் அதிக மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் கொண்டுள்ளதாகவும் உள்ள அதே வேளை மிகக் குறைந்தளவு

நிலப்பரப்பை மட்டுமே கொண்டுள்ளது. வட மாகாணம் மிகக் குறைந்த மக்கள் தொகையையும் மற்றும் மிகக் குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் கொண்டுள்ளது. மிகப்பெரிய நிலப்பகுதியை வட மத்திய மாகாணம் கொண்டுள்ளது.

உள்கட்டமைப்பு மற்றும் சமூக வசதிகள் பிராந்திய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதுடன், பிராந்தியங்கள் உப பிராந்தியங்களில் உள்ள மக்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துகின்றன. தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் மாகாணங்களிடையே குறிகாட்டிகள் ஏற்றத்தாழ்வுகளைக் காட்டுகின்றன. (அட்டவணை - 01) சுகாதார சேவைகள், கல்வி வசதிகள் மற்றும் சமூகங்களிடையே வறுமை நிலை, மாகாணங்களின் சுபீட்சநிலை மற்றும் சமூக பொருளாதார செயல்திறன் போன்ற மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை அணுகுவதற்கான நிலைகளில் மாகாணங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**அட்டவணை- 01: மாகாணங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக பொருளாதார குறிகாட்டிகள்**

| **மாகாணங்கள்** | **நிலப் பரப்பு -2017** (ச.கிமீ.) | **நடுஆண்டு சனத் தொகை 2017** ( '000) | **மாகாண மொ. உ. உற்பத்தி 2017** (ரூபா.பில்.) | **சராசரி மாத தனிநபர் வருமானம் 2016 (ரூ.) (ஒரு வீட்டிற்கு ஒரு நபருக்கு)** | **வேலை யின்மை விகிதம் 2017 (%)** | **வறுமை சுட்டெண் 2016** | **சுபீட்ச சுட்டெண் 2017** |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 3,593 | 6,081 | 4,949 | 14,400 | 3.2 | 1.7 | 1.28 |
| மத்திய | 5,575 | 2,722 | 1,428 | 9,890 | 4.5 | 5.4 | 0.35 |
| தென் | 5,383 | 2,611 | 1,317 | 11,253 | 5.0 | 3 | 0.49 |
| வட | 8,290 | 1,119 | 602 | 8,434 | 7.7 | 7.7 | 0.19 |
| கிழக்கு | 9,361 | 1,677 | 754 | 11,420 | 6.0 | 7.3 | 0.07 |
| வடமேல் | 7,506 | 2,508 | 1,412 | 11,420 | 3.7 | 2.7 | 0.35 |
| வடமத்திய | 9,741 | 1,349 | 749 | 11,248 | 4.3 | 3.3 | 0.20 |
| ஊவா | 8,335 | 1,349 | 1,047 | 10,139 | 3.5 | 6.5 | 0.14 |
| சப்பிரகமுவ | 4,921 | 2,028 | 1,060 | 9,711 | 3.7 | 6.7 | 0.15 |
| **இலங்கை** | **62,705** | **21,444** | **13,317** | **11,307** | **4.2** | **4.1** | **0.77** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி, குடி சன தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம

**அட்டவணை- 02: மாகாணங்களில் அடிப்படை தேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள்**

| **மாகாணங்கள்** | **வீதி அடர்த்தி 2017 (கி.மீ)** | **பாதுகாப்பான குடிநீர் 2016 (%)** | **விளக்குக்கான மின்சாரம் 2016 (%)** | **கழிப்பறை வசதிகள் 2016 (%)** | **மருத்துவ மனைகள் 2017** | **பாடசாலைகள் 2017** | **பல்கலைக்கழக அனுமதி 2017 எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 1.02 | 98.2 | 98.7 | 93.0 | 157 | 1,359 | 8,248 |
| மத்திய | 0.72 | 77.7 | 96.8 | 91.5 | 170 | 1,519 | 3,224 |
| தென் | 0.60 | 92.7 | 98.6 | 92.8 | 120 | 1,112 | 4,525 |
| வட | 0.41 | 92.3 | 92.4 | 89.1 | 105 | 997 | 2,039 |
| கிழக்கு | 0.24 | 97.7 | 93.2 | 90.6 | 124 | 1,110 | 2,307 |
| வட மேல் | 0.55 | 92.7 | 95.9 | 90.3 | 147 | 1,256 | 3,142 |
| வடமத்திய | 0.32 | 71.2 | 97.3 | 88.7 | 89 | 812 | 1,554 |
| ஊவா | 0.42 | 79.4 | 96.0 | 92.4 | 91 | 900 | 1,770 |
| சப்பிரகமுவ | 0.82 | 76.0 | 96.4 | 91.8 | 113 | 1,129 | 2,887 |
| **இலங்கை** | **0.50** | **88.8** | **96.9** | **91.7** | **1,116** | **10,194** | **29,696** |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி,** குடி சன தொகை **கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்** திணைக்களம்

### 3.2. மாகாண சபைகளின் சேவை வழங்கல்கள்

அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபைகள் உப தேசிய மட்டங்களில் பொது முதலீடுகளுடன் சேவை வழங்கல்களை செய்கின்றன. அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு தேவையான எண்ணிக்கையிலான ஆளணியுடன் அவசியமான நிறுவன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, வீதிகள், விவசாயம், நீர்ப்பாசனம் போன்ற முக்கிய துறைகள் உட்பட மாகாண விடயங்கள் விரிவானவை. (அட்டவணை- 03)

**அட்டவண 03: மாகாண சபைகளின் சேவை வழங்கல்கள் - சொத்துக்கள், நிறுவனங்கள் மற்றும் பணியாளர்கள்**

| மாகாணங்கள் | வீதிகள் கி. மீ. | | பாடசாலைகளின் எண்ணிக்கை 2017 | வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 2017 | உள்.அத.சபை எண் 2018 | மாகா.சபை அனுமதி ஆளணி 2019 |
|---|---|---|---|---|---|---|
| | மாகண | கிராமிய | | | | |
| மேல் | 1,952 | 11,180 | 1,287 | 134 | 49 | 63,111 |
| மத்திய | 2,244 | 13,216 | 1,465 | 165 | 47 | 50,744 |
| தென் | 1,630 | 10,491 | 1,046 | 116 | 49 | 46,551 |
| வட | 2,120 | 11,668 | 975 | 104 | 34 | 36,148 |
| கிழக்கு | 1,121 | 12,171 | 1,080 | 117 | 45 | 37,900 |
| வட மேல் | 2,745 | 20,571 | 1,221 | 145 | 33 | 47,541 |
| வட மத்திய | 1,947 | 12,709 | 802 | 87 | 27 | 29,887 |
| ஊவா | 2,371 | 10,923 | 864 | 89 | 28 | 32,054 |
| சப்பிரகமுவ | 2,371 | 7,871 | 1,101 | 110 | 29 | 37,703 |
| **இலங்கை** | **18,921** | **83,956.8** | **9,841** | **1,067** | **341** | **382,639** |

மூலம்: **சன தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் ள் உள்துறை மற்றும் மாகாண சபை மற்றும் உள்சாலைகள் உள்ளாட்சி அமைச்சகம் ,கல்வி அமைச்சு, சுகாதார ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவ அமைச்சகம்.**

இத்தகைய நிலையில், அந்தந்த மாகாணங்களில் உள்ள மக்களுக்கு அவர்களின் அடிப்படை செயல்பாடு மற்றும் மாகாண அபிவிருத்திக்கு நடுத்தர கால மற்றும் வருடாந்த திட்டங்களுக்கு ஏற்ப பொது சேவையை வழங்க மாகாண சபைகளுக்கு போதுமான நிதி அவசியமாகிறது .

### 3.3. மாகாண சபைகளின் மூலதன செலவு தேவைகள்

பிராந்தியங்களுக்கு இடையேயும் / பிராந்தியத்துக்குள்ளேயும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் சமச்சீரான ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தி, உள்ளூர் வளங்களை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களுக்கான நடுத்தர கால நிலையான அபிவிருத்தி திட்டங்களை வகுத்துள்ளன. இத் திட்டங்கள் மாகாணங்களுக்கான பல்துறைசார்ந்த ஒருங்கிணைந்த திட்டமாகவும் பெறுபேற்று அணுகுமுறையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. துறை மற்றும் உப துறை முனேற்ற இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கான துறைசார் நிகழ்ச்சி திட்டங்கள் ஆகியவை நன்கு வரையறுக்கப்பட்டு அண்ணளவான வருடாந்த நிதித் தேவைகளும் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

மாகாணங்களின் நடுத்தர கால ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் சேவை வழங்கல்களிற்கு அமைவாக ஒவ்வொரு மாகாண சபையும் நிறுவன பெறுபேற்று கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது அந்தந்த மாகாண சபைகளின் கீழ் உள்ள அபிவிருத்தித்துறைகள் அவை சார்ந்த நிறுவனங்களினதும் பெறுபேற்று கட்டமைப்பை உள்ளடக்கியுள்ளது .

பொது வழிகாட்டுதல்களுக்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டிற்கான மூலதனத் தேவைகளைத் தயாரிப்பதற்காக நிதி ஆணைக்குழு 2019 பெப்பிரவரியில் மாகாண சபைகளுக்கு வருடாந்த வழிகாட்டியை பின்வருவனவற்றை கருத்தில் கொண்டு வழங்கியுள்ளது .

- தேசிய அபிவிருத்தி கொள்கை கட்டமைப்பு
- உப தேசிய மட்டங்களிலான அரசாங்கத்தின் விசேட அபிவிருத்தி திட்டங்கள்
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடைந்துகொள்ளுதல்
- மாகாணங்களின் பௌதீக மற்றும் மனித வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல்
- அபிவிருத்தியில் பிராந்தியங்களுக்கிடையேயும் பிராந்தியங்களுக்குள்ளேயும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்
- திட்ட அமுலாக்கத்தில் தயார்நிலை மற்றும் அவற்றின் சாத்தியக்கூறு
- பொது முதலீட்டு நிகழ்ச்சி திட்டம் (PIP)

### 3.4. மாகாண சபைகளின் மீண்டு வரும் செலவு தேவைகள்

மீண்டு வரும் செலவினங்களின் பெரும்பகுதி மாகாண சபைகளின் ஆளணியின் தனியாள் ஊதியங்களாக அமைகின்றது. ஏனய மீண்டு வரும் செலவினங்களில் பிரயாணம் விநியோகங்கள், பராமரிப்பு, ஒப்பந்த சேவைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள், சிறுபிள்ளை பருவ மேம்பாட்டு அதிகார சபைகள், மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகள் மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைகள் போன்ற நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ஆகியவை அடங்கும். மூலதன சொத்துக்களின் பராமரிப்புத் தேவைகள் அதாவது வீதிகள், கட்டிடங்கள் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை ஏனைய மீண்டு வரும் செலவினங்களின் கீழ் உள்ளடங்குகின்றன .

பின்வருவனவற்றை கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டிற்கான மீண்டு வரும் தேவைகளை அடையாளம் காண நிதி ஆணைக்குழு பிப்ரவரி 2019 இல் மாகாண சபைகளுக்கு வழிகாட்டியினை வழ ங்கியது

- அங்கீகரிக்கப்பட்ட ஆளணி
- மாகாணங்களில் உண்மையாக உள்ள பணியாளர்கள் மற்றும் வெற்றிடங்கள்
- மாகாணசபைகளுக்கு மத்திய அமைச்சுகளால் ஒப்புதல் அளித்த புதிய நியமனங்கள்
- தனியாள் வேதன மதிப்பீடுகள், சம்பள நிலுவைகள் மற்றும் ஊழியர்களின் கடன்கள் பற்றிய மதிப்பீடுகள்
- மூலதன சொத்துக்களை பராமரித்தல் உள்ளடங்கலாக ஏனைய மீண்டு வரும் செலவினங்களின் மதிப்பீடுகள்
- தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான படிக் கொடுப்பனவுகள்
- உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள்
- சம்பந்தப்பட்ட அரசாங்க சுற்றறிக்கைகள்

### 3.5. 2020 ஆம் ஆண்டிற்கான மாகாணங்களின் மூலதன மீண்டு வரும் செலவுகளின் வரவு செலவுத்திட்ட தேவைகள்

அனைத்து மாகாண சபைகளும் 2020 ஆம் ஆண்டிற்காக அரசாங்க கொடைகளின் கீழ் மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களின் மதிப்பீட்டு தேவைகளை சமர்ப்பித்துள்ளன.

**அட்டவணை - 04: 2020 வரவு செலவு திட்டத்தில் மூலதனம் மற்றும் மீண்டு வரும் செலவு தேவைகலிற்கான மாகாண சபைகளின் கோரிக்கைகள்**

*(ரூபா.மில்.)*

| மாகாண சபைகள் | மூலதன தேவைகள் | மீண்டு வரும் தேவைகள் | | | மொத்த தேவைகள் |
|---|---|---|---|---|---|
| | | தனியாள் வேதனம் | ஏனைய மீண்டுவரும் தேவைகள் | மொத்தம் | |
| மேல் | 6,171.7 | 50,618.4 | 31,928.3 | 82,546.7 | **88,718.4** |
| மத்திய | 14,475.6 | 37,479.5 | 11,432.7 | 48,912.2 | **63,387.8** |
| தென் | 12780.3 | 32,132.5 | 10,300.0 | 42,432.5 | **55,212.8** |
| வட | 14,639.6 | 25,215.0 | 8,017.9 | 33,232.9 | **47,872.5** |
| வடமேல் | 9,125.9 | 34,445.7 | 9,998.3 | 44,444.1 | **53,569.9** |
| வட மத்திய | 6,967.5 | 21,689.1 | 6,343.5 | 28,032.5 | **35,000.1** |
| ஊவா | 12,029.3 | 23,337.2 | 6,960.3 | 30,297.5 | **42,326.8** |
| சப்பிரகமுவ | 7,328.0 | 30,917.2 | 8,190.0 | 39,107.2 | **46,435.2** |
| கிழக்கு | 18,619.5 | 26,114.9 | 10,034.4 | 36,149.2 | **54,768.8** |
| **மொத்தம்** | **102,137.4** | **281,949.5** | **103,205.3** | **385,154.8** | **487,292.3** |

### 3.6. மாகாண வருவான மூலங்கள்

மாகாண வருவாய்கள் இரண்டு முக்கிய வழிகளில் உருவாகிறது.

**i) அரச வருவாய்களின் மாற்றல்கள்**

டிசம்பர் 29, 2010 அன்று பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட 01/2010 ஆம் இலக்க அரசிறை கொள்கை சுற்றறிக்கையின் படி, தேசிய வருவாய் அதிகாரிகளான, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளார், சுங்கப்பணிப்பாளர் நாயகம் மற்றும் மோட்டார் போக்கு வரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆகியோரால் சேகரிக்கப்பட்ட வருவாயை பின்வரும் அடிப்படையில் மாகாணங்களுக்கு மாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்,

அ. தேசத்தை கட்டியெழுப்பும் வரிகளில் 33 1/3% (NBT)
ஆ. முத்திரை வரியின் 100%
இ. வாகன பதிவு கட்டணத்தில் 70%

**ii) பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய்**

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாவது அட்டவணையில் 36.01 முதல் 36.20 வரை வரி வருமானம் மற்றும் வரியற்ற வருமானம் ஆகிய மாகாண வருவாய் மூலங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. மாகாண வருமானத்தின் முக்கிய வழிகளாக மோட்டார் வாகன உரிம கட்டணம், கலால் வரி, முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதங்கள் ஆகியவை அடங்கும். மாகாணங்களால் சேகரிக்கப்பட்ட முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதங்கள் உள்ளூர் அதிகார சபைகளுக்கு மாற்றப்படுகின்றன .

### 3.7. 2020 ஆம் ஆண்டிற்கான வருமான முன்மதிப்பீடுகள்

மாகாணங்களுக்கான வருமான இலக்குகளின் கணிப்பீடுகள் இரண்டு முக்கிய வருமான வழிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அவையாவன அரசாங்க வருமானத்தின் மாற்றல்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் வழிகளுக்கான இலக்கு என்பனவாகும். மேற்கூறிய இரண்டு வழிகளின் கீழ் கணிக்கப்பட்ட வருவாய்களின் மொத்த தொகையானது மதிப்பிடப்பட்ட மாகாண மீண்டு வரும் தேவைகளிலிருந்து கழிக்கப்படுகிறது. நிதி ஆணைக்குழு வருவாய் இலக்குகளை நிர்ணயிப்பதில் பொதுத்திறைசேரி மற்றும் மாகாண சபைகளுடன் ஒரு ஆலோசனை செயல்பாட்டில் ஈடுபடுகிறது.

i) **அரசங்க வருவாய்களின் மாற்றல்கள்**

அரசிறை கொள்கை திணைக்களம் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அரசாங்கத்தின் வருடாந்த வருவாய் மாற்றல்களின் மொத்த தொகைளை மதிப்பிடுகிறது. 29.12.2010 திகதியிடப்பட்ட அரசிறை கொள்கை சுற்றறிக்கை இல: 01/2010 இன் பிரகாரம் மொத்தத் தொகையில் மாகாணங்களின் பகிர்வுகள் , அட்டவணை - 05 இல் தரப்படுகிறது .

**அட்டவணை - 05: அரச வருவாய்களில் மாகாணங்களிற்கான மாற்றல்களின் பகிர்வு - *2020***

*(ரூபா.மில்.)*

| **மாகாணங்கள்** | **மாகாணங்களின் பகிர்வு %** |
|---|---|
| மேல் | 48 |
| மத்திய | 09 |
| தென் | 09 |
| வட | 05 |
| வட மேல் | 09 |
| வட மத்திய | 05 |
| ஊவா | 05 |
| சப்பிரகமுவ | 05 |
| கிழக்கு | 05 |
| **மொத்தம்** | 100 |

i i) **பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான வழிகளுக்கான இலக்குகள் -2020**

2020 ஆம் ஆண்டிற்கான முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதங்கள் உட்பட முன்மதிப்பீடு செய்யப்பட்ட வருமான சேகரிப்புகள் ரூபா . 49,756 மில்லியன். 2020 ஆம் ஆண்டிற்கான முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதம் தவிர்த்து முன்மதிப்பீடு செய்யப்பட்ட வருமான சேகரிப்புக்கள் ரூ. 20, 111 மில்லியன். 2020 ஆம் ஆண்டிற்கு வருமான முன்மதிப்பீடு செய்யப்பட்ட விபரங்கள் அட்டவணை - 06 இல் தரபப்படுகின்றது.

**அட்டவணை - 06 : 2020 ஆம் ஆண்டிற்கான பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் முன்மதிப்பீடுகள்**

*(ரூபா.மில்.)*

| **மாகாணங்கள்** | **முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்கள் தவிர்ந்த வருவாய் மதிப்பீடு** | | | **முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்கள் உள்ளடங்கலாக வருவாய் மதிப்பீடு** | | |
|---|---|---|---|---|---|---|
| | **மாகாண மதிப்பீடு** | **ஆணைக் குழுவின் மதிப்பு** | **மாகாணங் களின் பகிர்வு %** | **மாகாண மதிப்பீடு** | **ஆணைக்குழு வின் மதிப்பீடு** | **மகாணங்களின் பகிர்வு %** |
| மேல் | 7,096 | 7,750 | 39 | 25,046 | 26,750 | 54 |
| மத்திய | 2,067 | 2,095 | 10 | 4,137 | 4,195 | 08 |
| தென் | 1,904 | 2,030 | 10 | 4,224 | 4,550 | 09 |
| வட | 772 | 880 | 04 | 1,697 | 1,860 | 04 |
| வட மேல் | 2,494 | 2,545 | 13 | 4,869 | 4,970 | 10 |
| வட மத்திய | 1,296 | 1,406 | 07 | 1,716 | 1,826 | 04 |
| ஊவா | 919 | 1,025 | 05 | 1,359 | 1,605 | 03 |
| சப்பிரகமுவ | 1,247 | 1,375 | 07 | 2,047 | 2,275 | 05 |
| கிழக்கு | 946 | 1,005 | 05 | 1,636 | 1,725 | 03 |
| **மொத்தம்** | **18,740** | **20,111** | **100** | **46,730** | **49,756** | **100** |

2020 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானத்திலிருந்து உள்ளூர் அதிகாரசபைகளுக்கு மாற்றுவதற்கு முன்மதிப்பீடு செய்யப்பட்ட முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதம் ரூ. 29,645 மில்லியன் ஆகும். உள்ளூர் அதிகாரசபைகளுக்கு வழங்கப்படவேண்டிய முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதங்களின் அட்டவணை - 07 இல் தரப்பட்டுள்ளது

**அட்டவணை - 07 : 2020 ஆம் ஆண்டி உள்ளூர் அதிகாரசபைகளுக்கு மாற்றப்படும் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதம்**

*(ரூபா.மில்.)*

| மாகாணங்கள் | முத்திரைவரி | நீதிமன்ற அபராதங்கள் | மொத்தம் | மாகாண பகிர்வு |
|---|---|---|---|---|
| மேல் | 18,000 | 1,000 | 19,000 | 64.1 |
| மத்திய | 2,000 | 100 | 2,100 | 7.1 |
| தென் | 2,000 | 520 | 2,520 | 8.5 |
| வட | 800 | 180 | 980 | 3.3 |
| வட மேல் | 2,100 | 325 | 2,425 | 8.2 |
| வட மத்திய | 180 | 240 | 420 | 1.4 |
| ஊவா | 360 | 220 | 580 | 2.0 |
| சப்பிரகமுவ | 700 | 200 | 900 | 3.0 |
| கிழக்கு | 550 | 170 | 720 | 2.4 |
| **மொத்தம்** | **26,690** | **2,955** | **29,645** | **100.0** |

## 4. அரசாங்க வருடாந்த வரவு செலவு திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கீடும் மாகாண சபைகளிடையே நிதி பகிர்ந்தளிப்பதற்கும் 2020 ஆம் ஆண்டிற்கான பரிந்துரை

### 4.1. கூட்டு சுட்டெண் மற்றும் மூலதன நிதிப் பகிர்வு

நிதி ஆணைக்குழு மாகாணங்களுக்கு நிதி பகிர்வு செய்வதற்காக குடிசனமதிப்பு புள்ளிவிவரத்திணைக்களத்துடன் இணைந்து முன்னேற்றகரமான புள்ளிவிவர சூத்திரம் ஒன்றை உருவாக்கியது. அதன்படி, “காரணி பகுப்பாய்வு” என்று அழைக்கப்படும் ஒரு பன்முக புள்ளிவிவர நுட்பத்தை பயன்படுத்தி ஒரு கூட்டு சுட்டெண் ஆணைக்குழுவால் மாகாணங்களிடையே மூலதன நிதியை ஒரு சீரான முறையில் பகிர்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த கூட்டு சுட்டெண் பின்வரும் மாகாண மட்ட குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது

- நடு ஆண்டு சன தொகை
- மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி
- வறுமைக் கோட்டுக்கு கீழ்ப்பட்ட நபர்கள் எண்ணிக்கை
- சராசரி மாதாந்த தனிநபர் வருமானம்
- மருத்துவ அலுவலர் ஒருவருக்கான நபர்கள்
- பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதியானவர்களின் எண்ணிக்கை

**அட்டவணை - 08 : 2020 ஆம் ஆண்டிற்கான கூட்டுச்சுட்டெண்ணும் மாகாணங்களுக்கிடையே மூலதன நிதிபகிர்வுகளுக்கான சதவீதங்களும்**

| மாகாணங்கள் மாகாணங்கள் | கூட்டுச்சுட்டெண் | சதவீதங்கள் |
|---|---|---|
| மேல் | 0.71179 | 7.83 % |
| மத்திய | 1.01822 | 11.21 % |
| தென் | 0.93367 | 10.28 % |
| வட | 1.17468 | 12.93 % |
| வடமேல் | 0.92328 | 10.16 % |
| வடமத்திய | 1.03606 | 11.40 % |
| ஊவா | 1.05958 | 11.66 % |
| சப்பிரகமுவ | 1.08216 | 11.91 % |
| கிழக்கு | 1.14696 | 12.62 % |

2020 ஆம் ஆண்டில் மாகாண சபைகளுக்கு மூலதன நிதி PSDG மற்றும் CBG ஒதுக்கீட்டில் மாகாணங்களுக்கு இந்த சதவீத மதிப்பு பயன்படுத்தப்படுகிறது.

**4.2. மூலதன நிதிகளின் பகிர்வுக்கான பரிந்துரை**

மாகாண சபைகளின் மதிப்பீட்டு தேவைகள் குறித்து, நிதி ஆணைக்குழு கௌரவ மாண்புமிகு ஆளுநர்கள், தலைமைச் செயலாளர்கள், மாகாண செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன் தொடர் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது .

இந்த கூட்டு சுட்டெண் அடிப்படையில் அரசாங்க வருடாந்த வரவு செலவு திட்டத்தில் PSDG மூலதன நிதியில் மாகாண சபைகளிற்கு வழங்கப்படவேண்டிய தொகையை நிதி ஆணைகுழு நிர்ணயிக்கின்றது.

மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களின் நடுத்தர கால அபிவிருத்திதிட்டத்தில் உள்ள துறை சார்ந்த முனேற்ற இலக்குகளுக்கு ஏற்ப அரசாங்கக்கொடைகளின் கீழ் தங்கள் வருடாந்த மூலதன வரவு செலவுத் தேவைகளை தயாரித்தன. குறித்த நிதியாண்டில் அந்தந்த மாகாண சபைகள் பெறக்கூடியதாக உள்ள ஏனைய மூலதன நிதியீட்டங்களை கவனத்தில் கொண்டு இத்தேவைகள் தயாரிக்கப்பட்டுள்ளன .

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டின் மாகாண சபைகளுக்கான மூலதனக்கொடையின் கீழ் பின்வருவனவற்றை நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

**அட்டவணை - 09 : 2020 ஆம் ஆண்டில் மாகாண சபைகளிற்கு பரிந்துரைக்கப்பட்ட மூலதன கொடைகள்- 2020**

*(ரூபா.மில்.)*

| மாகாணங்கள் | மூலதன கொடைகள் - 2020 | | |
|---|---|---|---|
| | மா.குஅ.கொ | பி.அ.கொ | வ.செ.கொ |
| மேல் | 7,047.0 | 704.7 | 849.0 |
| மத்திய | 10,089.0 | 1,008.9 | 282.0 |
| தென் | 9,252.0 | 925.2 | 468.0 |
| வட | 11,637.0 | 1,163.7 | 396.0 |
| வட மேல் | 9,144.0 | 914.4 | 333.0 |
| வட மத்திய | 10,260.0 | 1,026.0 | 132.0 |
| ஊவா | 10,494.0 | 1,049.4 | 141.0 |
| சப்பிரகமுவ | 10,719.0 | 1,071.9 | 177.0 |
| கிழக்கு | 11,358.0 | 1,135.8 | 222.0 |
| **மொத்தம்** | **90,000.0** | **9,000.0** | **3,000.0** |

PSDG மற்றும் CBG ஐத் தவிர மாகாண வருமானத்தை அதிகரித்து ஊக்குவிக்க வருவாய் செயல்திறன் கொடை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த புதிய கொடை 2020 தேசிய வரவு செலவுத்திட்டத்தில் சேர்க்கப்படும். CBG,RBG என்பன அரசாங்கதிற்கு மேலதிக சுமையாக அமையாது. ஏனெனில் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டிய மொத்த தொகையில் இவை சிறியதொரு தொகையாகும் .

### 4.3. மீண்டு வரும் நிதிகளின் பகிர்வும் பரிந்துரையும்

ஒவ்வொரு மாகாண சபையும் சமர்ப்பித்த மீண்டு வரும் வரவு செலவுத்திட்ட தேவைகளின் மீளாய்வுக்கு பின்னர், நிதி ஆணைக்குழு அவசியமான மீண்டு வரும் செலவு தேவைகளை மதிப்பிடுவதற்கு சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளுடன் தொடர் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. தொகுதி கொடையை மதிப்பிடுவதற்கு மொத்தமாக மதிப்பிடப்பட்ட மீண்டுவரும் செலவினங்களிலிருந்து மதிப்பிடப்பட்ட பகிர்ந்தளிக்கப்பட்டவருமான சேகரிப்பு தொகை கழிக்கப்பட வேண்டும். அரசாங்கத்திலிருந்து மாகாணசபைகளுக்கான வருமான மாற்றல் அரசிறை கொள்கை திணைக்களத்தால் இன்னும் மதிப்பிடப்படவில்லை என்பதால் பொதுத்திறைசேரி முழுமையான தொகுதி கொடை என்பது அரசாங்க வருமான மாற்றல் தொகையைக் களித்த தொகையாக அமையும். மீண்டு வரும் நிதி குறித்த இவ் விபரங்கள் அட்டவணை -10 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை - 10 : மாகாண சபைகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட தொகுதி கொடை - 2020**

*(ரூபா . '000.)*

| மாகாணங்கள் | மதிப்பிடப்பட்ட மொத்த மீண்டு வரும் செலவு* | மா. சபை. முத்திரை வரி, நீதி மன்ற அபராதம் தவிர்ந்த இலக்கு | முழுமையான மொத்த கொடை (மாற்றல்கள் கழிக்க முன்) |
|---|---|---|---|
| மேல் | 66,282,976 | 7,750,000 | 58,532,976 |
| மத்திய | 47,550,078 | 2,095,000 | 45,455,078 |
| தென் | 40,353,850 | 2,030,000 | 38,323,850 |
| வட | 33,263,115 | 880,000 | 32,383,115 |
| வட மேல் | 42,992,551 | 2,545,000 | 40,447,551 |
| வட மத்திய | 27,878,598 | 1,406,000 | 26,472,598 |
| ஊவா | 31,447,956 | 1,025,000 | 30,442,956 |
| சப்பிரகமுவ | 37,160,832 | 1,375,000 | 35,785,832 |
| கிழக்கு | 35,684,706 | 1,005,000 | 34,679,706 |
| **மொத்தம்** | **362,614,662** | **20,111,000** | **342,503,662** |

* தனியாள் ஊதியங்கள் வெற்றிடங்களுக்கான,ஊதியங்கள் **நிரல்** அமைச்சு இணைப்புகள் மற்றும் சம்பள நிலுவைகள் ஆகியவை உள்ளடங்கும்

வீதிகள், கட்டிடங்கள் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற மூலதன சொத்துக்களை பராமரிப்பதற்கான செலவுகள், மதிப்பிடப்பட்ட மொத்த மீண்டுவரும் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகள் சம்பளங்கள் உறுபினர்களின் படிகள் என்பவை உளூராட்சி மன்றங்களிற்கான மாற்றல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது .விபரங்கள் அட்டவணை 11 ல் தரப்படுகின்றது.

**அட்டவணை- 11: உள்ளூர் அதிகாரசபைகளுக்கான மாற்றல்கள் - 2020**

*(ரூபா. '000.)*

| மாகாணங்கள் | உறுப்பினர்களுக்கான படிகள் | வேதன மீளளிப்பு | உள்ளூராட்சிக்கு(மொத்தம்) |
|---|---|---|---|
| மேல் | 353,040 | 10,826,746 | 11,179,786 |
| மத்திய | 236,880 | 3,741,964 | 3,978,844 |
| தென் | 213,960 | 2,818,375 | 3,032,335 |
| வட | 145,800 | 2,104,526 | 2,250,326 |
| வட மேல் | 181,980 | 2,334,326 | 2,516,306 |
| வட மத்திய | 110,580 | 1,071,045 | 1,181,625 |
| ஊவா | 115,235 | 1,425,519 | 1,540,754 |
| சப்பிரகமுவ | 163,450 | 1,540,266 | 1,703,716 |
| கிழக்கு | 172,260 | 2,059,236 | 2,231,496 |
| **மொத்தம்** | **1,693,185** | **27,922,003** | **29,615,188** |

## 5. சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கான பரிந்துரைகளை வழங்குவதில் சிக்கல்களும் வரையறைகளும்

தற்போது மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களில் சேவை வழங்கல்களிற்கு பின்வரும் வடிவங்களில் நிதியைப் பெறுகின்றன.

அ) அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையினடிப்படையில் மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவு தேவைகளுக்கான கொடைகள்

ஆ) அபிவிருத்தி நடவடிக்கைகளை மாகாண சபைகளால் அமுலாக்க மத்திய அமைச்சுக்களிலிருந்து ஒதுக்கீடு

இ) வெளிநாட்டு நிதியளிப்புடனான விசேட திட்டங்களின் மாகாண கூறுகளை அமுலாக்குவதற்கான ஒதுக்கீடு

I. தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய பாதீட்டுத்திணைக்களம், நிதி ஆணைக்குழு, மாகாண சபைகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு இடையே பொருத்தமான ஒருங்கிணைப்பு இல்லை என்பதை ஆணைக்குழு அவதானித்தது. வினைத்திறனுடைய ஒருங்கிணைப்புடன் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறிமுறை இல்லாத நிலையில், அந்தந்த நிறுவனங்கள் தங்கள் பொறுப்புகளில் தோல்வியடைகின்றன. இதனால் இரட்டிப்புகள் ஏற்படுவதுடன் வளங்களும் வீணாகின்றன.

II. மாகாண சபைக்கு மூலதன செலவினங்களுக்கான அரசாங்க கொடைகள் மிகக் குறைவு என்று மாகாண அதிகார சபைகள் கருத்து தெரிவித்துள்ளதுடன் மாகாண சபைகளுக்கு மூலதன வரவுசெலவுத்திட்ட கொடையை அதிகரிக்குமாறும் அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்ட மொத்த மூலதன செலவினத்தில் குறைந்தது 25% ஒதுக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டது. இது மாகாண சபைகளின் அரசியலமைப்பு கட்டாய செயல்பாடுகள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட கூறுகளுக்கு ஏற்ப சேவை வழங்குவதற்கு தேவைப்படுகிறது.

III. மத்திய அமைச்சுக்களினுடாக பகிர்ந்தளிக்கப்பட்ட விடயம் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கும் சிறப்பு திட்டங்களின் மாகாண கூறுகளை செயல்படுத்துவதற்கும் கணிசமான அளவு ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒதுக்கீடுகள் நிதி ஆணைக்குழுவின் தகவலுக்கும் பரிந்துரைக்கும் அப்பாற்பட்டனவயாக உள்ளன. இந்த ஒதுக்கீடுகள் சரியான தேவை மதிப்பீடுகள் இன்றி எழுந்தமானதான முறையில் செய்யப்படுகின்றன என்பது நிதி ஆணைக்குழுவின் கருத்தாகும். இந்த நடைமுறை சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி செயல்முறையை பெரிதும் பாதிப்பதுடன் இது சமூக பொருளாதார விளைவுகளில் துணை தெரிவுகளிற்கு வழிவகுக்கின்றது.

IV. அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் மகாணசபைகளில் ஐந்து அமைச்சுக்கள் மட்டும் உருவாக்கப்பட்டுள்ளன. மாகாண மட்டத்தில் அமைச்சுக்களின் விடய பரப்புக்கள் ஒருமித்தவையான முறையில் ஐந்து மாகாண அமைச்சுக்களிடையே பகிரப்பட்டிராமை மாகாண சபைகளில் துறை சார்பான திட்டமிடல், வரவுசெலவு மற்றும் கணக்கியல் ஆகியவற்றில் ஒருங்கிணைப்பு இல்லாதுள்ளது. இவை வினைதிறனுள்ளதாக அமைக்கவேண்டிய தேவையுள்ளது.

V. தற்போது சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை ஒதுக்கக்கூடிய வகையில் வேலைகளை பிரித்து ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன, இது தரம் மற்றும் எதிர்பார்த்த விளைவுகளில் பதிப்பை ஏற்படுத்துகின்றது.

VI. அரசியலமைப்பில் மாகாண சபைகளிற்கு இருபது பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான வழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளபோதும் மாகாண சபைகளில் வருமானப் பொறிமுறையானது பின்வருவனவை சார்பாக வினைதிறனற்றதாக உள்ளது.

அ) விற்பனை புரள்வு வரி என்பது முக்கிய வருமான மார்க்கமாக இருந்தும் அது மீள பெறப்பட்டு விட்டது.

ஆ) முக்கிய வருமானங்கள் மத்தியில் சேகரிக்கப்பட்டு மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

இ) இதுபோன்ற நியதி சட்டங்களை உருவாக்குவதற்கு பாராளுமன்ற ஒப்புதல் தேவை என்பதால் மாகாண சபைகள் வருமான வரி தொடர்பான நியதி சட்டங்களை இயற்ற முடியாதுள்ளன.

ஈ) பல விடயங்களில் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான விகிதங்களை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டிய தேவை உள்ளது

**VII.** தனியார் துறையின் கணிசமான முதலீடுகள் அதிகரிப்பை ஏற்படுத்தினாலும் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கான அரசாங்க ஒதுக்கீடுகளும் அதிகரித்து வருகின்றமை இரட்டிப்பு தன்மைகளையும் துணைத்தெரிவுகளையும் ஏற்படுத்துகின்றது. மக்களின் சொந்த செலவீனங்களும் அதிகரிப்பது அவதானிக்கப்படுகிறது.

**VIII.** மாகாண சபைகள் தொடர்பாக முக்கிய அவதானிப்புகளுடன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை நிதி ஆணைக்குழுவுக்கு கிடைகின்றது. மாகாண சபைகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தவோ அல்லது கண்காணிக்கவோ நிதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்பதால் இவை உரிய நடவடிக்கைகளுக்காக மாகாண ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

## 6. கொள்கை பரிந்துரை -2020

மேலே 5 வது பிரிவில் உரைக்கப்பட்ட சிக்கல் வரையறைகள் என்பவற்றை கருதித் கொண்டு நிதி ஆணைகுழு பின்வரும் பரிந்துரைகளை செய்கின்றது

I. தேசிய, உப தேசிய மட்டங்களில் கொள்கை வகுக்கும் செயல்பாடுகள் பொது முதலீடுகள் குறித்த திட்டமிடல் என்பவற்றில் ஒருங்கிணைப்பு இல்லாதது சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியில் மந்தநிலையையும் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சியையும் பாதிப்பது அவதானிக்கப்படுகிறது. ஆகையால் நிதி ஆணைக்குழு ஒன்பது மாகாணங்களுக்கான விரிவான ஒரே சீரான திட்டமிடல் செயல்முறையை தேசிய திட்டமிடல் மற்றும் மாகாண சபைகளின் ஈடுபாட்டுடன் சிறந்த தேவை மதிப்பீட்டு செயல்முறை விளைதிறனுள்ள அபிவிருத்தி முதலீடு என்பவற்றை நோக்கமாகக் கொண்டு முன்னெடுத்துள்ளது. மேலும், தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்புடன் ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலமும், அதிகாரப் பகிர்வு என்ற கருத்தாக்கத்திற்குள் தேசிய மற்றும் உப தேசியத் திட்டமிடலுக்கான பொதுவான கட்டமைப்பை நிறுவுவதன் மூலமும் இந்த செயல்முறையை வலுப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இந்த பணியில் விரிவான திட்டமிடல், பயனுள்ள தேவை மதிப்பீடு மற்றும் அதற்கேற்ப பொது முதலீட்டில் வளங்களை ஒதுக்கீடு செய்வதில் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி ஆணைக்குழு முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

II. உப தேசிய மட்டத்தில் வழங்கப்படும் கட்டாய சேவைகளின் பெரும்பகுதி அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புகளை மேற்கொள்ள அனைத்து மாகாண சபைகளும் நிதி ஆணைக்குழு வழங்கிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி தங்களது சொந்த நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களையும் வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களையும் உருவாக்கியுள்ளன. மேலும் மாகாண சபைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களை செயல்படுத்த உரிய நிறுவனங்களை நிறுவியுள்ளன. தற்போது மாகாண சபைகள் மாகாணங்களில் உப தேசிய மட்டத்தில் மத்திய அமைச்சுக்களால் செயல்படுத்தும் நிறுவன வழிகள் இல்லாத பெரும்பாலான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இருப்பினும், மத்திய அமைச்சுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களை செயல்படுத்த திறைசேரியிலிருந்து தொடர்ந்து நிதிகளைப் பெறுகின்றன. ஆகவே பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களில் முதலீடு செய்வதற்கு மாகாண சபைகளுக்கு போதுமான நிதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய விடயங்களை மாகாண சபைகள் மூலமாக மட்டுமே அமுல்படுத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது. மாகாண சபைகளுக்கு போதுமான நிதி வழங்குவது தேசிய வரவு செலவுத் திட்டத்திற்கு மேலதிக சுமையாக இருக்காது ஏனெனில் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களில் தேசிய அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடு தவிர்க்கப்படலாம். நன்கு சீரமைக்கப்பட்ட முறையைப் பின்பற்றுகின்ற மாகாண சபைகளிடையே பற்றாக்குறையான அளவு நிதி மட்டுமே பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் ஒரு சிறிய பகுதி மட்டுமே மாகாண சபைகள் மூலம் செலவிடப்படுவது நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதை வலிமையற்றதகுகிறது. மேலும் சமசீரான பிராந்திய வளர்ச்சியை அடைவதற்கு நிதி ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து பொருத்தமான விதிமுறை சூத்திரத்தின் அடிப்படையில் தேசிய அமைச்சுக்களும் திணைக்களங்களும் தங்கள் ஒதுக்கீட்டை நன்கு சீரமைக்கப்பட்ட முறையில் மாகாணங்களுகிடையில் பகிர்ந்துகொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.

III. தேசிய மட்டத்தில் அடையாளம் காணப்படுகின்ற பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் சார்ந்த கருத்திட்டங்களை அமுல்படுத்துவது ஏற்றுகொள்ளப்பட்ட அபிவிருத்தி கட்டமைப்பிற்குள் மாகாண சபைகள் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும். பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் சார்ந்த விசேட வெளிநாட்டு நிதியளிப்புடனான கருத்திட்டங்களின் மாகாண கூறுகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு, மாகாண சபைகளுக்கு நேரடியாக வழங்கப்படுவதுடன் அத்தகைய தகவல்கள் நிதி ஆணைக்குழுவுக்கு கிடைக்க வேண்டும். இது நிதிகளின் இரட்டிப்பு மற்றும் ஒன்றுக்குமேல் ஒன்றான செயல்பாடுகளை குறைப்பதுடன் இதன் மூலம் நிதிகளை வினைத்திறனுடன் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதோடு பொது முதலீடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலையும் பேணக்கூடியதாக இருக்கும்.

IV. மாகாண சபைகளில் ஐந்து அமைச்சுக்கள் ஒரே விதமான விடய பரப்புக்களின்றி சீரான முறையின்றி காணப்படுகின்றன. எனவே மாகாணங்களிடையே திறமையான மற்றும் பயனுள்ள முகாமைத்துவம், அமுலாக்கல், ஒருங்கிணைப்பு, பொருந்தக்கூடிய தன்மையை சீரான முறையில் செயல்படுத்த ஐந்து அமைச்சுக்களின் விடய பரப்புக்களை பொருத்தமான முறையில் வடிவமைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

V. சமூக அடிப்படையிலான அமைப்புகளிற்கு நேரடி ஒப்பந்தங்களை அனுமதிப்பது சிறிய நடவடிக்கைகளின் பெருக்கத்திற்கு வழிவகுகிறது என்பதை நிதி ஆணைக்குழு அவதானித்துள்ளது. இது தரம் உற்பத்தித்திறன் மற்றும் மக்களின் நன்மைக்கான சிறந்த சேவை வழங்கல்களை உறுதிப்படுத்தாது. எனவே திட்டம் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள சமூக அமைப்புகளிற்கு மட்டுமே நேரடி ஒப்பந்தங்கள் வழங்குவதை மட்டுப்படுத்தவும் எந்த துணை ஒப்பந்தங்களையும் அனுமதிக்காதிருப்பதையும் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

VI. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருமான வழிகள், பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான செலவு மற்றும் பொறுப்புகளை பூர்த்தி செய்யுமளவுக்கு போதுமானதாக இல்லை என்று நிதி ஆணைக்குழு அவதானித்துள்ளது. மேலும் பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாகாணங்கள் எந்தவொரு புதிய வருமானத்தையும் அறிமுகப்படுத்த முடியாது. எனவே, பொருத்தமான கொள்கைகளை வகுக்கும் நோக்கில் இந்த விடயத்தில் மாகாண சபைகளுடன் இணைந்து அரசிறை கொள்கை திணைக்களம் ஆழமான ஆய்வை மேற்கொள்வது பொருத்தமானது. அரசாங்கத்தின் மீதான சுமையைக் குறைக்கும் வகையில் மாகாண சபைகள் தங்கள் வருமானத்தை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும்.இந்த வகையில் ஒன்பதாவது அட்டவணையின் கீழ் மாகாண சபை நிரலின் விடயமான வருமான அதிகரிப்பு திட்டங்கள் என்பது முக்கியமானதாகிறது

VII. நாட்டின் சுகாதார அமைப்பு முறைகள் ஒரு சிறந்த மனித அபிவிருத்தி குறியீட்டை அடைய பங்களித்துள்ளது. எவ்வாறாயினும் கடந்த பல ஆண்டுகளில் சுகாதாரத் துறையில் தனியார் துறையின் அதிக முதலீடு காணப்படுகின்ற அதே நேரத்தில் அரசாங்கத்தின் சுகாதார செலவீனங்கள் அதிகரித்திருப்பது பயனற்ற விளைவுகளுக்கு வழிவகுக்கிறது. எனவே, இந்த விடயத்தில் நிதி அமைச்சும் சுகாதார அமைச்சும் இணைந்தது தீவிரமான ஆய்வை மேற்கொள்ள பரிந்துரைக்கப்படுகின்றது. கல்வித்துறைக்காகவும் இதேபோன்றதொரு ஆய்வு மேற்கொள்ளப்பட ஆலோசனை கூறப்படுகின்றது. பொது மக்களின் சுகாதார துறையின் தனிப்பட்ட செலவினங்கள் அதிகரித்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. சுகாதார துறையில் பங்களிப்பு முறையினை ஊக்குவிக்க பரிந்துரை செய்யப்படுகிறது .

VIII. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மாகாண ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களின் கவனத்தை ஈர்க்கும் முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டுகின்றன. வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகளை விளைதிறனுள்ள வகையில் விரைந்து தீர்ப்பதற்காக மாகாண மட்டத்தில் உள்ள கணக்காய்வு குழுக்கள் ஒழுங்கு தவணையில் கூடி, பலவீனங்களை வினைத்திறனுள்ள வகையில் சீரமைக்க மாகாண சபைக்கு சிபாரிசு செய்ய பரிந்துரைக்கிறோம். அத்துடன் மாகாண சபைகளில் உள்ளக கணக்காய்வு முறை மற்றும் கட்டுப்பாட்டு பொறிமுறைகளும் பலப்படுத்தப்பட வேண்டும்.

நிதி ஆணைக்குழு தனது பரிந்துரைகளை அதி உயர் கரிசனைக்காகவும் வினைத்திறன் மிக்க செயடற்பாடுகளுக்காகவும் சமர்பிக்கின்றது .

U.H.பளிஹகார
நியமன அங்கத்தவரும் தலைவரும்

இந்திரஜித் குமாரசுவாமி
பதவி வழி அங்கத்தவரும் இலங்கை மத்தியவங்கி ஆளுநரும்

R.H.S.சமரதுங்க
பதவி வழி அங்கத்தவரும் திறைசேரிச் செயலாளரும்

V.கனகசபாபதி
நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

H.M.சப்றுல்லா
நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

## இணைப்பு – 01 : தொகுதி கொடைஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு 2015 – 2019

(ரூபா.மில்)

| மாகாணம் | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடுவிப்பு 2019 மே வரை |
| மேல் | 18,842 | 18,842 | 21,744 | 21,741 | 15,091 | 14,989 | 14,962 | 14,962 | 16,700 | 6,987 |
| மத்திய | 23,542 | 23,542 | 23,375 | 23,374 | 23,320 | 23,233 | 25,894 | 25,894 | 29,000 | 12,112 |
| தென் | 21,459 | 21,459 | 20,508 | 20,507 | 21,033 | 21,084 | 23,807 | 23,807 | 23,200 | 9,725 |
| வட | 16,268 | 16,268 | 16,757 | 16,754 | 17,078 | 17,034 | 19,035 | 19,035 | 20,550 | 8,606 |
| வட மேல் | 21,705 | 21,634 | 20,829 | 20,821 | 21,866 | 21,788 | 22,463 | 22,463 | 24,250 | 10,118 |
| வட மத்திய | 13,616 | 13,616 | 14,174 | 13,722 | 13,829 | 13,686 | 15,355 | 15,355 | 16,300 | 6,850 |
| ஊவா | 16,237 | 16,237 | 16,422 | 16,249 | 16,115 | 15,971 | 16,268 | 16,268 | 17,900 | 7,587 |
| சப்பிரகமுவ | 18,410 | 18,410 | 18,219 | 18,218 | 19,350 | 19,281 | 21,828 | 21,828 | 22,300 | 9,350 |
| கிழக்கு | 17,475 | 17,475 | 17,166 | 16,996 | 18,668 | 18,430 | 20,482 | 20,482 | 20,500 | 8,600 |
| **மொத்தம்** | 167,554 | 167,483 | 169,194 | 168,38 | 166,350 | 165,49 | 180,094 | 180,09 | 190,700 | 79,935 |

*மூலம்-நிதி ஆணைக்குழு மற்றும் பொதுத்திறைசேரி*

## இணைப்பு – 02 : மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை ஒதுக்கீடு

(ரூபா.மில்)

| மாகாணம் | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு 2019 மே வரை |
| மேல் | 2,598 | 2,641 | 2,894 | 1,400 | 765 | 400 | 1,306 | 450 | 1,463 | 323 |
| மத்திய | 3,879 | 2,575 | 3,684 | 1,353 | 1,169 | 1,800 | 1,996 | 1,350 | 2,236 | 634 |
| தென் | 3,997 | 2,211 | 2,246 | 874 | 1,168 | 1,778 | 1,994 | 1,300 | 2,233 | 608 |
| வட | 5,038 | 2,399 | 3,199 | 1,800 | 1,657 | 2,327 | 2,830 | 1,828 | 3,169 | 904 |
| வட மேல் | 2,500 | 2,151 | 3,216 | 1,505 | 1,228 | 1,800 | 2,097 | 1,500 | 2,348 | 694 |
| வட மத்திய | 2,230 | 2,658 | 2,838 | 1,550 | 1,448 | 2,310 | 2,473 | 1,650 | 2,769 | 828 |
| ஊவா | 3,361 | 2,229 | 2,736 | 1,100 | 1,682 | 1,790 | 2,873 | 1,983 | 3,218 | 955 |
| சப்பிரகமுவ | 4,360 | 2,966 | 2,913 | 1,042 | 1,365 | 1,500 | 2,331 | 1,700 | 2,611 | 778 |
| கிழக்கு | 2,469 | 1,830 | 3,297 | 1,510 | 1,544 | 1,952 | 2,637 | 1,839 | 2,953 | 887 |
| **மொத்தம்** | 30,432 | 21,660 | 27,026 | 12,134 | 12,026 | 15,657 | 20,537 | 13,600 | 23,000 | 6,611 |

*மூலம்-நிதி ஆணைக்குழு மற்றும் பொதுத்திறைசேரி*

*குறிப்பு: அபிவிருத்தித் திட்டங்களையும் உள்ளடக்கிய ஒதுக்கீடு கள்.விடுவிப்பு தொகை மா.கு.அ.கொ.PSDG மற்றும் பி.அ.கொ CBG மட்டும்*

**இணைப்பு – 03 : பிரமாண அடிப்படைக் கொடை ஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு 2015 –2019**

(ரூபா.மில்)

| மாகாணம் | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு | பகிர்வு | விடு விப்பு 2019மே வரை |
| மேல் | 525 | 2,641 | 460 | 200 | 254 | 100 | 254 | 60 | 254 | 20 |
| மத்திய | 500 | 2,575 | 423 | 117 | 389 | 200 | 389 | 200 | 389 | 75 |
| தென் | 385 | 2,211 | 413 | 369 | 388 | 400 | 389 | 275 | 389 | 100 |
| வட | 400 | 2,399 | 475 | 437 | 551 | 589 | 551 | 522 | 551 | 150 |
| வட மேல் | 425 | 2,151 | 375 | 360 | 408 | 400 | 408 | 250 | 408 | 50 |
| வட மத்திய | 375 | 2,658 | 400 | 400 | 482 | 300 | 482 | 250 | 482 | 50 |
| ஊவா | 375 | 2,229 | 475 | 415 | 560 | 315 | 560 | 400 | 559 | 65 |
| சப்பிரகமுவ | 400 | 2,966 | 514 | 293 | 454 | 432 | 454 | 280 | 454 | 50 |
| கிழக்கு | 400 | 1,830 | 465 | 445 | 514 | 500 | 514 | 312 | 514 | 50 |
| **மொத்தம்** | 3,785 | 21,660 | 4,000 | 3,036 | 4,000 | 3,236 | 4,001 | 2,549 | 4,000 | 610 |

***மூலம்-நிதி ஆணைக்குழு மற்றும் பொதுத்திறைசேரி***

**இணைப்பு – 04 : மாகாண வருமான சேகரிப்பு மூலங்கள் – 2018**

(ரூபா.மில்)

| மாகாணம் | முத்திரைவரி & நீதி மன்ற தண்டப்பணம் உள்ளடக்கிய இலக்கு(2018) | பன்முகப்படுத்தப்பட்ட மூலங்களில்லிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த விற்பனை புரள்வு வரி (BTT) | மோட்டார்வாகன அனுமதி கட்டணம் | மது வரி | ஏனையன ** | முத்திரை வரி | நீதி மன்ற தண்டப் பணம் | |
| மேல் | 23,725,000 | 846 | 4,244,750 | 649,350 | 2,313,894 | 17,284,580 | 955,860 | 25,449,280 |
| மத்திய | 3,492,000 | 1,636 | 963,025 | 424,991 | 527,808 | 1,845,477 | 97,068 | 3,860,006 |
| தென் | 4,010,000 | 985 | 1,251,751 | 132,947 | 517,982 | 2,003,469 | 472,295 | 4,379,429 |
| வட | 1,220,000 | - | 378,372 | 35,255 | 394,602 | 798,260 | 177,033 | 1,783,522 |
| வட மேல் | 4,340,000 | 7,804 | 1,396,531 | 151,058 | 503,591 | 1,913,484 | 444,571 | 4,417,040 |
| வட மத்திய | 1,490,000 | 792 | 604,011 | 64,313 | 600,336 | 167,162 | 237,681 | 1,674,295 |
| ஊவா | 1,570,000 | 1,060 | 451,897 | 97,824 | 357,462 | 349,821 | 213,478 | 1,471,542 |
| சப்பிரகமுவ | 2,245,000 | - | 768,347 | 119,509 | 333,878 | 320,364 | 192,348 | 1,734,446 |
| கிழக்கு | 1,520,000 | - | 495,604 | 124,822 | 283,790 | 526,221 | 154,374 | 1,584,811 |
| **மொத்தம்** | 43,612,000 | 13,123 | 10,554,288 | 1,800,069 | 5,833,343 | 25,208,838 | 2,944,708 | 46,354,371 |

***மூலம்: மாகாண சபைகளின் மாத வருமான அறிக்கைகள் – 2018***

** 2010 வரை உரிய வி.மொ.வரி B.T.T சேகரிப்பு,*

*** மற்றும் வாடகை, வட்டி, பரீட்சைக் கட்டணம், மூலதன சொத்துக்களின் விற்பனை, பந்தய வரி போன்றவை அடங்கும்.*

**இணைப்பு – 05 : நிதி ஒதுக்கீடு செய்வதற்கான சூத்திரத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாறிகள் - 2020**

| மாகாணம் | குடிசனத் தொகை 2017 ('000') | மா.மொ.தே.உ 2017 (ரூபா. மில்.) | வறுமைக் கோட்டின் கிழுள்ளவர் தொகை | சராசரி மாத தனிநபர் வருமானம் 2016 (ரூபா) | நபர்களுக்கு மருத்துவ அதிகாரி 2017 | பல்கலைக் கழக விஞ்ஞான பாட நெறிக்கு தகுதி யானவர் 2016 % |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 6,081 | 4,949 | 102,476 | 14,400 | 805 | 30 |
| மத்திய | 2,722 | 1,428 | 145,260 | 9,890 | 1,066 | 11 |
| தென் | 2,611 | 1,317 | 77,250 | 11,253 | 1,245 | 18 |
| வட | 1,119 | 602 | 85,239 | 8,434 | 926 | 5 |
| வட மேல் | 2,508 | 1,142 | 120,085 | 11,426 | 1,490 | 10 |
| வட மத்திய | 1,349 | 749 | 66,879 | 11,268 | 1,320 | 4 |
| ஊவா | 1,349 | 1,047 | 86,645 | 10,139 | 1,481 | 6 |
| சப்பிரகமுவ | 2,028 | 1,060 | 134,605 | 9,711 | 1,546 | 10 |
| கிழக்கு | 1,677 | 754 | 120,085 | 8,261 | 1,153 | 6 |
| **மொத்தம்** | **21,444** | **13,048** | **938,524** | **94,776** | **11,032** | **100** |

*ஆதாரம்: குடிசனத் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம்*